23rd November 1963]

நகரப் பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகள் (ஊதியம்)

* 497 கேள்வி.—திரு. எஸ். முத்துலிங்கம்: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விக்குப் பதிலளிப்பாரா—

முனிசிபல் கமிஷனர்களின் சம்பளத்திற்குத் தகுந்தவாறு நகர பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளின் சம்பளத்தை உயர்த்த அரசினருக்கு உத்தேசமுண்டா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: இல்லை.

திரு. வி. எஸ். எஸ். மணி: ஸார், கிராம சேவக்குகளையே பஞ்சாயத்து நிர்வாக அதிகாரிகளாக நியமிக்கப்போவதாக ஒரு பிரபோஸல் இருப்பதாகச் சொல்லப்படுகிறது. அது உண்மையா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: உண்மைதான். அது பரிசீலனையில் இருக்கிறது.

புலவர் கா. கோவிந்தன்: தலைவர் அவர்களே, கிட்டத்தட்ட இரண்டு லட்சம், மூன்று லட்சம் அளவுக்கு வரி வசூல் செய்யக் கூடிய ஊராட்சி மன்றங்களுக்கு நிர்வாக அதிகாரிகளாக இருப்பவர்களுடைய சம்பளம் மிகக்குறைந்த அளவில் இருப்பதினால்தான் லஞ்சப் புகார்கள் பிறக்க இடம் ஏற்படுகிறது. ஆகவே இருக்கக்கூடிய நிலைமையை ஒட்டி அவர்களுடைய சம்பளத்தை உயர்த்த அரசாங்கம் முன் வருமா?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: லஞ்சம் என்பது சம்பளத்தைப் பொறுத்தது அல்ல. மக்களுடைய பண்பைப் பொறுத்தது. இப்போது இருக்கக்கூடிய முதல் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 125—5—175 என்ற விகிதத்திலும், இரண்டாவது கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 90—4—110—3—140 என்ற விகிதத்திலும் சம்பளம் கொடுக்கப்படுகிறது. செலக்‌ஷன் கிரேட் பஞ்சாயத்து அதிகாரிகளுக்கு 50 ரூபாய் ஸ்பெஷல் சம்பளம் கொடுக்கப்படுகிறது.

கடலூர் முனிசிபல் கவுன்சில்

* 498 கேள்வி.—திரு. வெ. கிருஷ்ணமூர்த்தி: கனம் ஸ்தல நிர்வாக அமைச்சர் தயவுசெய்து கீழ்க்கண்ட கேள்விகளுக்குப் பதிலளிப்பாரா—

(அ) கடலூரில் முனிசிபல் அங்கத்தினர்கள் எத்தனை பேர் ராஜினமா செய்திருக்கின்றனர்?

(இ) அவர்கள் ராஜினமா செய்ததற்குக் காரணம் என்ன?

(உ) இப்போது நிர்வாகம் எவ்வாறு நடைபெறுகிறது?

கனம் திரு. சே. ம. அ. மஜீத்: (அ) & (இ) 1920-ம் வருடத்திய சென்னை ஆரம்பக்கல்வி சட்டத்தின் கீழ் வாடகை மதிப்பு நிர்ணயிக்கப்பட்ட எல்லாக் கட்டிடங்களுக்கும், நிலங்களுக்கும்,